II ADJ COURT, TRICHY

**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>IDOP.220/2024</u>**

<u>முன்னிலை – எஸ். கோபிநாதன், பி.எஸ்ஸி.பி.எல்.,</u>

<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.</u>

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் புதன்கிழமை மனுதாரர் தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) உதவியாளர் திரு.கார்த்திக் ராஜா அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.A.ஜான் கென்னடி | தந்தை பெயர் | : | திரு.T.அந்தோணிசாமி |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 04.03.2026

**P.W. : 1 (சாட்சியின் அடையாளம் ஆதார் அட்டை மூலம் சரிபார்க்கப்பட்டது)**

**<u>மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு முதலாவது சாட்சி ஆவேன். நான் இத்துடன் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதை என் முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ளவும்.

MADURAI BENCH OF MADRAS HIGH COURT



1. 11.02.2022 தேதியிட்ட திருமண பத்திரிக்கை அசல் **ம.த.சா.ஆ.1** ஆகும்.

2. திருமண புகைப்படம் அசல் **ம.த.சா.ஆ.2** ஆகும்.

3. மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை அசல் **ம.த.சா.ஆ.3** ஆகும்.

4. 13.05.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **ம.த.சா.ஆ.4** ஆகும்.

5. 15.05.2024 தேதியிட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **ம.த.சா.ஆ.5** ஆகும்.

6. 11.02.2022 தேதியிட்ட திருமண பதிவு சான்றிதழ் அசல் **ம.த.சா.ஆ.6** ஆகும்.

**<u>எ.த.கு.வி.</u>** :

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் உங்கள் மனைவிக்கு எதிராக சொல்லப்பட்ட குற்றசாட்டுகளை திரும்ப பெற்று கொள்கிறீர்களா? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | நீங்கள் இருவரும் எத்தனை நாட்களாக பிரிந்து வாழ்கிறீர்கள்? |
| **பதில்** | இரண்டு வருடங்களுக்கு மேலாக. |
| **கேள்வி** | நீங்கள் இருவரும் சேர்ந்து வாழ்வதற்கு குடும்ப உறவினர்கள் மூலம் நடந்த பேச்சு வார்த்தை என்ன ஆனது? |
| **பதில்** | தோல்வியில் முடிந்து விட்டது. |
| **கேள்வி** | நீங்கள் தாலி செயின் 5 பவுன் மற்றும் அது சம்பந்தப்பட்ட 4 கிராம் தங்க நகைகள் இன்று எதிர்மனுதாரர் வசம் இருந்து திரும்ப பெற்று கொண்டீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | அதேபோல் எதிர்மனுதாரரும் அவருடைய 7 பவுன் தங்க நகைகளை |

| | |
|---|---|
| | கொடுத்து விட்டீர்களா? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அவருடன் சேர்ந்து வாழ வாய்ப்பு இருக்கிறதா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | நீங்கள் இருவரும் சேர்ந்து வாழ்ந்தால் இருவருக்கும் என்ன நேரலாம்? |
| **பதில்** | பிரச்சனைகள் வந்து எதிர்காலம் ஆபத்துக்குள்ளாகிவிடும். |
| **கேள்வி** | இருவருக்கும் இடையே குழந்தை ஏதாவது உண்டா? |
| **பதில்** | இல்லை. |
| **கேள்வி** | நீங்கள் ஒருவேளை விவாகரத்து பெற்றுவிட்டால் மறுமணம் செய்து கொள்ள தயாராக இருக்கிறீர்களா? |
| **பதில்** | ஆம். |

**<u>மறுவிசாரணை.</u>** **இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 04.03.2026 என் முன்பு கையெழுத்து செய்யப்பட்டது.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 04.03.2026

II ADJ COURT, TRICHY